# கல்வி குறித்து வீணான சந்தேகம் வேண்டாம் விடுதலைப் புலிகள் நிலைப்பாடு குறித்து ராஜன்

''மாணவன் ஒருவன் கல்விகற்பதை விடுதலைப் புலிகள் முழுமையாக வரவேற்கின்றனர். மாணவனின் கல்வி விடுதலைப் போராட்டத்திற்குத் தேவை எமது சொத்து கல்வி. இதற்குத்தான் இன்று பாதிப்பு. இந்தக் கல்வியைப் பாதுகாப்பதற்கே நாம் போராடுகிறோம்'' இவ்வாறு நேற்று மாலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற அமரர் நா.கிருஷ்ணானந்தன் நினைவுப்பேருரையிலும்பொருளிதழ் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையிலும் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இ. ராஜன் தெரிவித்தார். ''கல்வி சம்பந்தமாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டினை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வீணான சந்தேகங்களுக்கு மனதில் இடமளிக்க வேண்டாம். கல்வி அமைப்பு முறையில் சில மாற்றங்களையே புலிகள் வேண்டுகின்றார்கள்'' எனவும் அவர் மேலும் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 273 செவ்வாய் 13-11-1990 (ஐப்பசி 27) ந. ஆகிர் 24

### அரசுக்கு எதிராகத் தமிழ்ச்சுங்க அத்தியட்சகர் தொடர்ந்த

# அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றில் விசாரணை

## தகுதி வாய்ந்தோர் புறக்கணிக்கப்படலாம்

இன விகிதாசார முறையானது அடிப்படை உரிமைகளை மீறுவதான நடவடிக்கையாகும். அரசாங்கத்திற்கு இதனைக்கைக்கொள்ள எதுவித உரிமையும் கிடையாது. அவ்வாறு விரும்பும் பட்சத்தில் தாபனக்கோவையினை மாற்ற வேண்டும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். கே. குணசேகர கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஏழு நீதியரசர்கள் முன்னிலையில் நடைபெற்ற அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின் போது தமது வாதத்திற் கூறினார்.

சுங்க அத்தியட்சகரான பொன்னம்பலம் ராமுப்பிள்ளை தமது பதவி உயர்வினை இன விகிதாசாரக் கொள்கைபாதிப்பதாகத்தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். கே. குணசேகர ஆஜரானார்.

இந்த முறையானது நடைமுறைப் படுத்தப்படுமானால் தகுதி வாய்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்பட நேரிடும். இதனால் குறிப்பிட்ட திணைக்களத்துக்கு வெளியேயிருந்தும் நியமனங்கள் வழங்கப்பட நேரிடுவதுடன் பல முறைகேடுகளுக்கும் இது இடமளிக்கும்.

பொதுச்சேவை எமது நாட்டில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். சுற்று நிருபம் தொடர்பாக பரிசீலிக்க உயர் நீதிமன்றத்துக்குச் சட்ட அதிகாரம் உண்டு.

இவ்வாறு அந்த சிரேஷ்ட சட்டத்தரணி தமது வாதத் —04ஆம் பக்கம் பார்க்க

### தமிழக முதலமைச்சர் கருணாநிதி சொல்கிறார்

## இந்தியாவின் நலன்களுக்குப் பணிய மறுத்ததால் ராஜீவின் அரசு புலிகள் மீது சினம் கொண்டது

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என திரு. ராஜீவ்காந்தி சில வாரங்களுக்கு முன் தெரிவித்த கருத்துக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்

''ராஜீவ்காந்தி அவரது பாட்டனார் நேருவின் நம்பகத்தன்மையானகுணத்திற்குக் களங்கம் விளைவிப்பதாகவே பேசி வருகிறார்.

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு இந்தியா உதவியது. ஆனால் இந்தியாவின் நலன்களுக்கு விடுதலைப் புலிகள் அடிபணிய மறுத்ததினால் அவர்கள் மீது ராஜீவ் அரசு சினம் கொண்டது. இந்த வெளிப்பாடே அவரின் பேச்சுக்குக் காரணமாக இருக்கிறது''.

ராஜீவ்காந்தி கலந்து கொண்ட ஓர் கூட்டத்திலேயே செல்வி. ஜெயலலிதா புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டதையும் முதல்வர் கருணாநிதி சுட்டிக் காட்டினார்.

## உதயபுரம் பகுதியில் குண்டுவீச்சு பல குடிசைகள் எரிந்து நாசம்

நேற்றுக்காலை 5.45மணியளவில் கொழும்புத்துறை மணியம்தோட்டம் பகுதியில் இரு பொம்மர்களும், அவ்ரோ விமானமும், ஹெலி ஒன்றும் தாக்குதல் நடாத்தின.

பொம்மர்களின் ரொக்கட் தாக்குதலினாலும், அவ்ரோவின் பீப்பாய்க் குண்டு வீச்சினாலும் 'உதயபுரம்' குடியேற்றப்பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்பராயின.

இத்தாக்குதலின் போது ரி. றெஜ்னா (13), கலியுகப் பெருமாள் ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்

கடற்கரையோரமாகப் பீப்பாய்க்குண்டு வெடிக்காத நிலையில் மணலினுட் புதையுண்டு காணப்படுகிறது.

(47, 74)

## வார்ட்டில் இருந்த நோயாளி வீதியில் விழுந்து கிடந்தார்

யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த வயோதிப நோயாளி ஒருவர், வைத்திய சாலை ஊழியர்களுக்கோ, ஏனைய நோயாளிகளுக்கோ தெரியாமல் வைத்தியசாலையை விட்டு வெளியேறி யாழ் நகர வீதியில் மனநிலை குழம்பியவாறு அநாதரவான நிலையில் விழுந்து கிடந்த சம்பவம் நேற்று நண்பகல் நிகழ்ந்துள்ளது. தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த பத்திரிகையாளர் ஒருவர் இது பற்றிச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் — 04 ஆம் பக்கம் பார்க்க

## காசோலைகள் வந்தன

பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட காலாவதியான காசோ —04ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்புப் பிரதேசமாக்க முயற்சி

கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையைச் சூழவுள்ள பகுதிகளையும் பாதுகாப்பு வலயமாக்க முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல மாதகாலம் மூடப்பட்டிருந்த கிளிநொச்சி வைத்தியசாலை, சில தினங்களுக்கு முன்னரேயே மீண்டும் திறக்கப்பட்டிருந்தது. எனி —04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாருக்கு புதிய அரச அதிபர்

மன்னார் மாவட்டத்திற்கு புதிதாக அரசாங்க அதிபரும், உதவி அரசாங்க அதிபரும் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். இத்தகவலை உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

தற்போது மன்னார் அரச அதிபராக எஸ். செபநாயகமும், உதவி அரச அதிபராக ரி. ராமலிங்கமும் கடமையாற்றி வருவது தெரிந்ததே.

## சாகமத்தில் ராணுவம் மீது புலிகள் 'காக்கஸ்ரோ' தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாகமம் என்ற இடத்தில் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிப் போராளிகள் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

காக்கஸ்ரோ ஷெல் தாக்குதலுடன் துப்பாக்கிச் சண்டையும் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது இராணுவத்தின் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம். எனினும் சேதவிபரம் சரியாகத் தெரியவில்லை. (71)

## கும்பிறுப்பிட்டியில் மோதல்கள் மேலதிகமாக ராணுவம் சென்றது

திருமலை மாவட்டத்தில் சலப்பையாறு, கும்பிறுப்பிட்டி பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களுக்குமேலதிகமாகராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

கும்பிறுப்பிட்டி காட்டுப் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்த் தாக்குதல்கள் தொடுப்பதால் மேலதிகமாக இப்பகுதிமுகாம்களுக்குச் சிப்பாய்கள் அனுப்பப் பட்டுள்ளனர்.

## சிலாபத்துறை ராணுவம்மீது தாக்கு

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாபத்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணும் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதங்களுடன் இராணுவத்தினர் முகாமிற்கு திரும்பிவிட்டனர். இதன் பொது விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை. (71)

## பென்சன் வவுச்சர்களை வங்கியில் வைப்பிலிட வேண்டாம்

செப்ரம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய கட்டு நிதி பற்றிய விபரங்கள் செயலகத்திற்கு இன்னும் கிடைக்காமையினால் வங்கிகளுக்குரிய காசோலைகள் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் ஓய்வூதியம் பெறு —04ஆம் பக்கம் பார்க்க

# சிறிய செய்திகள்

## வர்த்தக் பாடக் கருத்தரங்கு

ஆண்டு 9, 10, 11 ஆகிய வகுப்புக்களில் வர்த்தகமும், கணக்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ள திகதிகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

15-ம் திகதி பண்டத்தரிப்புக் கோட்ட ஆசிரியர்களுக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், வடமராட்சிக் கோட்ட ஆசிரியர்களுக்கு அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்திலும் கருத்தரங்கு நடைபெறும்.

16-ம் திகதி தென்மராட்சிக் கோட்ட ஆசிரியர்களுக்கு டிறிபேக் கல்லூரியிலும், வேலணைக் கோட்ட ஆசிரியர்களுக்கு சேர். துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்திலும் 17-ம் திகதி யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களுக்கு வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும்; 19-ம் திகதி மருதனாமடக் கோட்ட ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்கு நடைபெறுமென்று வர்த்தகக் கல்வி அதிகாரி சி. சிவராசா அறிவித்துள்ளார்.

## கூ.சங்க இழப்பு விபரம் சேகரிப்பு

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை தற்போதைய அசம்பாவிதங்களினால் இம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள சொத்துக்களின் இழப்புக்கள், மற்றும் சங்கங்களின் வேலை செய்யும் பணிப்பாளர்களின் இழப்புக்கள், காயங்கள் என்பன பற்றிய விபரங்களைத் திரட்டி வருகின்றது.

இவ்வாறான விபரங்களைத் தந்துதவுவதன் மூலம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க முடியும் என யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை ஏனைய கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுள்ளது.(ப10)

## கனரக வாகனம் பலத்த சேதம்

மாங்குளத்தில் இராணுவநடவடிக்கையின் போது பொம்மர் தாக்குதலில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகமும், வாகனமும் சேதமடைந்துள்ளன.

வட பிராந்தியத்துக்கான வீதி அபிவிருத்தி அதிகார சபை இயந்திரப் பொறியியலாளர் அலுவலகமும், இவ்வலுவலகத்திற்கு சொந்தமான பல இலட்சம் ரூபா பெறுமதியான கனரக வாகனம் ஒன்றுமே சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த இவ்வலுவலகம் ஒரிரு மாதங்களுக்கு முன்பே மாங்குளத்திற்கு மாறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (38)

## ஷெல் வெடித்து சிறுவர் காயம்

சாவகச்சேரிக் கடற்கரையில் அநாதரவாகக் கிடந்த இரு ஷெல்கள் வெடித்ததில் இரு சிறுவர்கள் சிறுகாயமடைந்தனர்.

இந்தச் ஷெல்கள் இரண்டும் இந்திய இராணுவத்தினரால் ஏவப்பட்டு வெடிக்காமல் கடலினுள் புதைந்து கிடந்ததாகவும், இரு சிறுவர்கள் அவற்றை எடுத்து நெருப்பில் எறிந்து விளையாடியபோது அவை வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-32)

## கிளி.தபால்சேவை சீரடைகிறது

கிளிநொச்சி தபாலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பதிவுத்தபால்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அத்துடன் தபால் பட்டுவாடாவும் சுமூகமாக நடைபெற்று வருவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (43)

## தவலிங்கத்துக்கு பதவியுயர்வு

உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. சிவசம்பு தவலிங்கம் அடுத்த ஆண்டு ஜனவரி 15 முதல் பொலிஸ் சுப்பிரின்டனாக பதவியுயர்வு பெறவுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த இவர் தெற்கின் பல பகுதிகளில் பொலிஸ் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து சிலகாலம் லஞ்சத்திணைக்களத்திலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஏ. எஸ் பியாக பணியாற்றியுள்ளார்.

## இன்றே உணவு அட்டைக்கு இறுதி நாள்

தற்போது இடம்பெயர்ந்திருக்கும் காங்கேசன்துறை மத்தி ஜே/ 234 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான உலர் உணவு அட்டைகள் பதியும் வேலைகள் மல்லாகம் விசாலாட்சி பாடசாலையில் நடைபெறுகின்றது.

இவ்உலர் உணவு அட்டைகள் பதிவதற்கான இறுதித் திகதி 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை எனக் காங்கேசன்துறை மத்தி கிராமசேவையாளரான கே கே. வேலாயுத பிள்ளை அறிவித்துள்ளார். (ப-10,

## வட்டு. பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

வட்டுக்கோட்டைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் தற்சமயம் அதிகரித்து வருகின்றன. கடந்தமாதம் மாவடிச்சந்தியில் பல சரக்குக் கடையில் திருட்டு நிகழ்ந்தது.

கடந்த வாரம் திருஞானசம்பந்த வித்தியாசாலை ஒழுங்கையில் இரவுநேரம் ஒரு வீட்டில் களவாடப்பட்டுள்ளது. இதைவிடப் பகல் வேளை உடுக்கைவளவுப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் உள்ள ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் வீட்டிலும் திருட்டுநிகழ்ந்துள்ளது.(ப 1)

## வடமராட்சி கிழக்கில் நிவாரணம்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்து வடமராட்சி கிழக்கில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிக் குடும்பங்களுக்கு போரூட், மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்), மெதடிஸ்த திருச்சபை ஆகிய நிறுவனங்கள் நிவாரணப் பொதிகளை அண்மையில் வழங்கின.

ஒவ்வொன்றும் ரூபா நானூறு வரை பெறுமதியான பொதிகளில் அரிசி, சீனி, மா, பயறு, கருவாடு, தேயிலை, மிளகாய்த்தூள், உப்பு, லக்ஸ்பிறே, சவர்க்காரம் என்பன அடங்கியிருந்தன. (18)

---

தென்மராட்சி வைத்தியசாலையில் இப்படியும் ஓர்நிலை

# 3 லீற்றர் டீசல் கொடுத்தாலே அவசர நோயாளிக்கான சிகிச்சை!

தென்மராட்சிப் பிரதேசத்தின் முக்கிய அரசினர் வைத்தியசாலையொன்றில் கடைப்பிடிக்கப்படும் சில நடைமுறைகள்பற்றி நோயாளர்களும், ஊழியர்களும் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்குக்கொண்டு செல்வதற்கு நோயாளி ஒருவர் மூன்று லீற்றர் டீசல் வழங்க வேண்டுமென நிர்வாகம் வற்புறுத்தி நிபந்தனை விதிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே அம்புலன்ஸில் ஒன்றுக்கு மேற்பட்ட நோயாளர் ஏற்றப்படும் சந்தர்ப்பங்களிலும் அவர்களிடமும் தனித்தனியாக மூன்று லீற்றர் டீசல் பெறப்படுகிறதாம்.

இதேவேளை இவ்வைத்தியசாலைக்கென சுகாதார அதியட்சகர் புதிய ஜெனரேட்டர் ஒன்றை வழங்கியும் அது நோயாளருடன் சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது

இதுபற்றி யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திடம் நமது நிருபர்கள் பிரஸ்தாபித்தபோது வைத்தியசாலையில் உள்ள அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வருவதற்கென குறித்த வைத்தியசாலைக்கு வாராந்தம் 15 லீற்றர் டீசல் தம்மால் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (16-74)

## பேராதனையில் 'கிறீஸ் பேய்' யுவதிகளைத்தேடி அலைகிறதாம்

கண்டி பேராதனைப் பகுதியில் இரவு நேரங்களில் மர்ம மனிதனொருவனின் நடமாட்டத்தால் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

'கிறீஸ் பேய்' என மக்களால் அழைக்கப்படும் இனம் தெரியாத இந்த மர்ம மனிதன் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து இளம் பெண்களின் மார்புகளைக் கடித்த பல சம்பவங்கள் அப்பகுதியில் நடைபெற்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் இளைஞர்கள் விழிப்புக் குழுக்களை அமைத்து இந்த 'மர்ம மனிதனைத்' தேடி வருகின்றனராம்.

இந்த 'மர்ம மனிதனின்' பீதியால் பேராதனைப் பகுதியில் யுவதிகள் இரவு வேளையில் தனியே நடமாடவோ, வீடுகளில் தங்கியிருக்கவோ அஞ்சுகின்றனராம். (16)

## புங்குடுதீவு - யாழ் பயணம் சைக்கிளுக்கு ரூ. 250

கணிசமான அளவு பணம் சம்பாதிப்பதற்கு சைக்கிள் இப்போதெல்லாம் பேருதவியாகச் சிலருக்குப் பயன்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு உதாரணமாக புங்குடுதீவு நிகழ்வு சுட்டிக் காட்டப்படுகிறது.

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கி அலுவலுக்கு வருவோரை சைக்கிள் மூலம் கொண்டு சென்று திருப்பிக் கொண்டு போய் விடுவதற்கு 250 ரூபா கூலி அறவிடப்படுகின்றது. (19)

## நயினாதீவில் கடற்படை ரோந்து பலமாகின்றது

நயினாதீவில் கடந்த சில நாட்களாக கடற்படையின்ரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடலைச்சுற்றிப் பீரங்கிப் படகு ரோந்து புரிவதாகவும் அங்கிருந்து தீவை நோக்கி ஷெல் அடிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் சிறிய ரோந்துப் படகுகளும் தீவைச்சுற்றி ரோந்தில் ஈடுபடுவதாகவும் இதனால் மீனவர்கள் பகலிற்கூட மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கூறப்படுகிறது.

மேற்கூறிய நிலை காரணமாக மாலை நேரத்தில் நேரத்துடனேயே மக்கள் நடமாட்டம் அடங்கி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-17)

## அராலி வீதி திருத்தப்படும்

யாழ் திட்டமிடல் பிரிவினரால் அராலி வீதி திருத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இருபத்தியொரு லட்சம்ரூபாவைக் கொண்டு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் தூர்ந்து போன வீதிகளைத் தற்காலிகமான முறையில் திருத்துவதென்வும், இதற்கு சமூக, பொது நிறுவனங்கள் சிரமதான மூலம் வேலை செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கி உதவ வேண்டுமெனவும் யாழ் திட்டமிடல் பகுதி ஆலோசனை வழங்கியுள்ளது. (24)

## நஷ்டம் பற்றி தலைமைப் பீடத்திற்கு அறிவிப்பு

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு நாலரை லட்சம் ரூபா நஷ்ட மேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமைப்பீடத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது (74)

## 6-வது புள்ளிக்கு உணவு கிடைக்கும்

வறுமை நிவாரண 5 - வது தொடர் உணவு முத்திரையின் புரட்டாதி மாதத்துக்குரிய 6 - வது புள்ளிக்கும், பொருட்கள் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்களும், உயர்மட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்ட இக்கூட்டம் யாழ் அரச செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. (47)


## சிறு விளம்பரம்

### சேவை

மீண்டும் றோணியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு சகல அச்சுவேலைகளும் நவீன முறையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் 138, நாவலர் றோட்(மனோஹராசந்தி) யாழ்ப்பாணம். 11032

### சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11030



## 31-ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி ஞானமணி நடராஜா

ஊவா மாகாணமதில் அன்று வேடுவ வம்சம் நாகரிகமற்றுத் திரிந்த வேளை தமிழீழத் திருமண்ணின் திருவிளக்காய் - படித்தவன்- பாண்டித்தியம் பெற்றவன் எனும் கீர்த்திமிகு சான்றோன் உன் கண் அவன் கணவன் எம். பியானான் 1947-ல் பதுளை தொகுதி தனில்... அஸ்திவாரமிலா கொடுங்கோலர் இன்று கோலோச்சினும் உன் மணாளன் மாண்பு மாறாது மறையாது. தீர்க்கசுமங்கலியாய் அவன்...... ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை தனயன் கே. வி. நடராஜா துணையாய் வாழ்ந்து, இன்றும் மங்கையர் திலகமாய் திகழ்கின்றாய் உன் ஆத்மா சாந்தியடைவதாக.

தூய வாத்ஸல்யத்துடன்
கே. வி. ரட்ணசபாபதி (நயினார்) குடும்பம்

'நிம்மதி'
உரும்பிராய் கிழக்கு.

11062

# முரசொலி

எமது சிந்தனை

1990 — 11 — 13 செவ்வாய்

''ஆரவாரமான வாக்குறுதிகள் எப்போதும் சந்தேகத்துக்குரியவை''.

- தியொடோர் பாக்கர்

## அரசின் முகத்தில் கரி

வாக்குறுதிகளை - ஒப்பந்தங்களை - மீறுவது ஸ்ரீலங்கா அரசுக்கு ஒன்றும் புதிதான விஷயமல்ல.

''வாக்குறுதிகளை நம்பாது - ஒரு முறைக்கு, இரு முறை - ஒப்பந்தம் கையெழுத்திட்டு ஏமாந்தவன் நான்'' என்று பாராளுமன்றத்திலேயே சொல்லிவிட்டு, தமது ஆசனத்தை ராஜிநாமாச் செய்தார் பெரியவர் செல்வநாயகம்.

1987 ஜூலை 29 இல் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்குமெனத் தான் நம்பிய ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியா, ஈராண்டுகள் கழிந்தும், உருப்படியாக ஸ்ரீலங்கா ஒன்றும் வழங்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டது.

இன்று பின்னோக்கிப் பார்க்கையில் ஓர் உண்மை தெளிவாகத் தெரிகிறது: ஒப்பந்தங்களின் - உறுதி மொழிகளின் - வாசகங்களுக்குள் - சொற்களுக்குள் நுழைந்து நீதியைத் தேடினால நாம் ஏமாற்றம் அடையவே நேரும்.

உண்மையாக - அந்தரங்க சுத்தியோடு - செய்யப்படும் உடன்பாடுகள்தாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மை செய்யவல்லன. அரசியல் நெருக்குவாரங்களுக்குத் தப்பும் நோக்குடன் செய்யப்படும் உடன்பாடுகள் நெருக்குவாரம் தீர்ந்தபின் கௌரவிக்கப்படுவதில்லை.

யாழ் போதனா வைத்தியசாலையைத் திறக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த சில மாதங்களாக முயன்று வந்தது ''கோட்டை முற்றுகையைக் கைவிட்டால் ஆஸ்பத்திரி இயங்கலாம்' என மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டார் ரஞ்சன் விஜேரத்னா கோட்டையையே கைவிட்ட பிறகு - வேறு வழியில்லாமல் - ஆஸ்பத்திரியைத் திறக்க இணங்கினார்.

செஞ்சிலுவைச் சங்கம் ஆஸ்பத்திரியைப் பொறுப்பேற்றது. அதைச்சூழ ஒரு பாதுகாக்கப்பட்ட வலயம், பாதுகாப்புப் பிரதேசம் எல்லாம் பிரகடனப்படுத்தப்பட்டன. வெள்ளைக் கொடிகள் பறந்தன.

வலயத்துள் எந்தவித அரசியல், ராணுவ நடவடிக்கையோ நடமாட்டமோ இருக்காது என இருசாராரும் உறுதி கூறினர். போராளிகள் அப்பகுதியிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

இந்தப் பின்னணியில், கடந்த வெள்ளிக்கிழமை காலைப்பொழுது பெரிய எதிர்பார்ப்புகளுடன் புலர்ந்தது! இருக்காதா பின்னே, குடாநாட்டிலேயே அதிக வசதிகள் படைத்த மருத்துவமனை - அதுவும் போதனா வைத்தியசாலை - கல்லில் நாருரித்துத் திறக்கப்படும் போது!

ஆனால், அதே காலை வேளையில், சொல்லிவைத்தாற்போல, ஸ்ரீலங்கா விமானப்படையின் மாசெற்றி பொம்மர் வைத்தியசாலை எல்லைக்குள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

ச. தே. செ. சங்கம் இதை ஒரு பாரதூரமான அத்துமீறலாகக் கருதி ஜெனீவாவுக்கு அறிவித்தது. 'தெளிவாக வரையறுக்கப்பட்ட, பாதுகாப்புப் பிரதேசத்துக்குள்' தாக்குதல் நடைபெற்றதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'மக்கள் செறிந்து வாழுகின்ற, விடுதலைப்புலிகளுக்குத் தளம் ஏதும் இல்லாத பகுதியில்' குண்டு வீசப்பட்டதாகச் சங்கத்தின் யாழ் பிரதிநிதி ஜோர்ஜ் பற்றஸன் கண்டித்துள்ளார்.

சாதாரண குடிமக்களைக் குண்டு வீசியும், சுட்டும் வெட்டியும் கொன்றுவிட்டு அவர்களுக்கு 'பயங்கரவாதிகள்' என்று பட்டம் சூட்டிவரும் ஆயுதப்படைகளுக்கு முண்டு கொடுக்கிற பாதுகாப்பு அமைச்சரும் அரசும் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகள் விடுவது வழக்கம்.

ஆனால் உண்மைகள் நெடுநாள் உறங்குவதில்லை! 1983 ஜூலையில், உச்சப் பாதுகாப்புள்ள வெலிக்கடைச் சிறைக்குள் தமிழ்க்கைதிகள் கேட்பாரற்று கொல்லப்பட்டபோது, உலகசமூகத்தின் கணிப்பில் ஸ்ரீலங்கா அரசு தாழ்ந்து போயிற்று!

இது இரண்டாவது தடவை: ஒரு சர்வதேச ஸ்தாபனத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டை மீறியதால் அவமானப்பட்டு நிற்கிறது அரசாங்கம்.

இங்கு நடக்கும் மனித உரிமைகள் மீறல் பற்றி ஐரோப்பிய பொருளாதார சமூகம் கவலை தெரிவித்த கையோடு, பிரதமமந்திரியின் மழுப்பல்களைக் கிழித்துக் கொண்டு தரிசனம் தந்துள்ளது சத்தியம்.

செஞ்சிலுவைச் சங்கமும் அகதிகளுக்கான ஐ. நா. ஆணையாளர் அலுவலகமும் இங்கு இருப்பது எமக்கு அனுகூலம் என்று, இந்தப் பத்திகளில், முன்பு குறிப்பிட்டிருந்தோம்.

ச. தே. செ. சங்கத்தின் நிலைப்பாட்டைப் பாராட்டுகிறோம்.

---

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் அபாய நிலை!

# மட்டு மாவட்டத் தமிழ் அகதிகள் காடுகளில் கடும் மழையால் அவதி!

கிழக்கில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்கள் பருவமழை ஆரம்பித்ததையடுத்து தங்குமிட வசதியின்றி காடுகளிலும் வயல்களிலும் தஞ்சமடைந்திருக்கும் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரவுபகலாகத் தொடர்ந்து மழை பெய்வதால் வீடு வாசல்களை இழந்து படுவான்கரைப் பிரதேசத்திற்குச் சென்றிருக்கும் மக்கள் தங்குமிடம் எதுவுமின்றி மழையில் நனைகின்றனர்.

மட்டக்களப்பு முதல் வாழைச்சேனைவரை இருபது மைல்நீளபிரதான பாதையை அண்டிய பகுதி மக்களில் 75 வீதத்திற்கு மேற்பட்டோர் தமது வீடு வாசல்களைக் கைவிட்டு காடுகளுக்கும் வயற் பிரதேசங்களுக்கும் சென்றிருக்கின்றனர்.

குறைந்தளவு தொகையினர் மட்டுநகர் சென்று அகதிமுகாமிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி வருகின்றனராம். காடுகளில் வாழும் மக்களின் தொகை பல்லாயிரக்கணக்காக இருப்பதனால் பெய்துவரும் பருவமழையால் துன்பங்கள் மேலும் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் பருவமழை தொடருமானால் வயல் வெளிகளிலுள்ள மக்கள் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்படக்கூடுமெனஅஞ்சப்படுகிறது.

மற்றும் வேப்பவெட்டுவான், பன்குடாவெளி, சந்தனமடு, கரடியனாறு, புலி பாய்ந்தகல், மாவடி முன்மாரி, மண்டூர் மக்கள் தங்குவதற்கு உரிய இடங்கள் இல்லாததால் வைக்கோலினால் வேய்ந்த வீடுகளில் பெரிய கஷ்டத்தின் மத்தியில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)

---

நாரந்தனையில் சம்பவம்

## நீர் நிரம்பிய பங்கருக்குள் வீழ்ந்து இரண்டரை வயதுப் பாலகன் பலி

சமயக் கிரியைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் வீட்டுவளவினுள் விளையாடிக் கொண்டிருந்த பாலகன் ஒருவன் மழைநீர் தேங்கியிருந்த பதுங்கு குழியில் இறங்கியதால் வெளியே வர முடியாது மூச்சுத்திணறி மரணமானான்.

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கேதாரநாதன் ரவி என்னும் இரண்டரை வயதுப் பாலகனே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். (ப-31)

---

## மாவீரர் கலந்துரையாடல்

பாடசாலை நடைமுறைப் பிரச்சினைகள் பற்றியும், மாவீரர் வாரம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்கு வடமராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரையும், கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் தவறாது சமுகம் கொடுக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஒரம்போ இண்டலுடன் வில்லுவண்டிச் சவாரி

வட்டுக்கோட்டைப் பகுதியில் தற்சமயம் ஆசிரியர்கள், மாணவர்கள் வண்டிகளில் பாடசாலைக்கு வந்து போகின்றனர். போக்குவரத்துக் கஷ்டத்தைப் போக்கப் பழைய வில்லுவண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாணவர்கள் ''ஒரம்போ'' என்று கிண்டல் பண்ணிக் குதூகலித்துக் கொண்டு பிரயாணம் செய்வதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. (ப-1)

---

## பூநகரியில் நெற்செய்கை பாதிப்பு

பூநகரிப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழை காரணமாக இங்கு நெற்செய்கையில் ஈடுபடும் 75 வீதமான விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

ஏற்கனவே இப்பகுதிகளில் நிலவிய கடும் வரட்சி காரணமாக 50 வீதமானோர் விதைப்பினைத் தொடராமல் மழையினை எதிர்பார்த்து இருந்தனர். விதைப்பினை மேற்கொண்டவர்களும் பயன்பெற முடியாதளவிற்கு பாதிப்புற்றுள்ளனர். அரசினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள், உரம் போன்ற தடை காரணமாகச் சென்ற வருடத்தை விட இவ்வருடம் உற்பத்திச் செலவு 3 மடங்காக அதிகரித்துள்ளது.

---

## நள்ளிரவில் வந்த முதலை நகரைக் கலங்கவைத்தது

மருதானை டாலி வீதியில் உள்ள மகாவலி நீர் வழங்கல் அமைச்சுக் காரியாலய வளவினுள் சில தினங்களுக்குமுன் நள்ளிரவுவேளை 15 அடி நீளமான முதலையொன்று புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்துள்ளது.

சாதாரணமாக ஒரு சிறு பாம்பைக்கூடக் கண்டிராத கொழும்பு நகர மக்கள் இச் செய்தியைக் கேட்டு அலறத் தொடங்கினர்.

பின்னர் தெகிவளை மிருகக்காட்சிச்சாலை ஊழியர்கள் இந்த முதலையை உயிருடன் பிடித்தனர்.

கொழும்பு நகரச் சாக்கடைநீர் வெளியேற்றப்படும் பேரை ஆறுமூலம் இந்த முதலை வந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலையை முதலில் கண்ட பாதுகாப்பு அதிகாரி பயத்தினாற் கத்தியபோது விபரமறியாத ஏனைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தொடர்ச்சியாகச் சுடத் தொடங்கினார்கள்.

அதிகாலையில் கேட்ட பரவலான துப்பாக்கிச் சூட்டினைக் கேட்ட மக்கள் பரபரப்படைந்து பொலிஸ் நிலையங்களை நோக்கிப் பாதுகாப்புத்தேடி ஓடினார்கள். (16)

---

## கொழும்புத்துறை அகதிகள் அவதி

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், சூசையப்பர் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள அகதிகளை அப்பாடசாலைகளின் அதிபர்கள் வெளியேறச் சொல்லி வற்புறுத்திவருகின்றனராம்.

இது குறித்து மேற்படி பாடசாலைகளில்தங்கியிருந்த அகதிகள் நேற்று யாழ் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தில் முறையிட்டுள்ளனர்.

---

## அசம்பாவிதத்தில்பாதிப்புற்றோருக்கு நிவாரணப் பொதிகள்

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் இலங்கைப்பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையினாலும் மற்றும் அசம்பாவிதங்களினாலும் இறந்தவர்கள், உழைக்கும் தகைமையற்ற-கை, கால் இழந்த அங்கவீனர்களுக்கு நிவாரணம் வழங்குவதென அண்மையில் நடைபெற்ற இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது பகுதியில் உள்ள(உதவி அரசாங்க அதிபர் ரீதியாக) இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்த பின் தமது பகுதிக் கிராமசேவை அலுவலர், உதவி அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஆகியோரின் சிபார்சுடன் இறந்தவராயின் மரண அத்தாட்சிப் பத்திரத்தையும், காயமடைந்து அங்கவீனமுற்றவராயின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவுத் தலைமை அலுவலகத்தில் நிவாரணப் பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்ட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே நிவாரணப் படிவங்களைப் பெறுவதற்கு வசதியாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (18)

பல்கலைக்கழகத்தில் யோகி

# தற்போதைய கல்விமுறை மாணவரை அந்நியப்படுத்துகிறது

''தமிழீழ விடுதலைப் புலிகள் கல்விக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் எமது கல்வித்திட்டம் எமது மக்களோடு, மண்ணோடு சேர்ந்து எமது கூட்டு மனப்பான்மையை வளர்க்கவில்லை. ஆகவே எமது கல்வித்திட்டம் மாற்றப்பட வேண்டும்''.

இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகி கூறினார்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் திரு. யோகி தொடர்ந்து பேசுகையில், தமிழ் மொழி ஒரு தொன்மை வாய்ந்த மொழி. எமது இனம் ஒரு வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இனம் என்பதை இப்போதைய கல்வித் திட்டம் எமக்கு எடுத்துக் கூறவில்லை.

இப்போதைய கல்வி எம் மக்களை எமது மண்ணிலிருந்து அந்நியப்படவே வைக்கிறது. ''எப்படியாவது வெளிநாடு போகலாம்'' என்ற மனநிலையை மக்களிடம் உண்டுபண்ணுகிறது. இதனால் புத்திஜீவிகள் என்று தங்களை நினைத்துக் கொள்பவர்கள் எமது மண்ணிலிருந்து அந்நியப்பட்டு நிற்கிறார்கள்.

## போராளிகளின் கல்வி

விடுதலைப் புலிகளில் இருக்கும் போராளி ஒரு சில வருடங்களில் போராட்ட முறையில் சிறந்த கல்வியைக் கற்று விடுகிறான். உலக விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளைப் பற்றி தெளிவாகக் கற்று விடுகிறான். அத்தோடு அரசியல், புவியியல் ரீதியிலும் அவன் கல்வி கற்கிறான்.

## கல்வித்திட்டம் மாற்றப்படும்

எமது மண்ணுக்காக, மக்களின் விடிவிற்காக எமது கல்வி அமைய வேண்டும். இதற்காக இன்றைய கல்வித்திட்டம் மாற்றப்படும். அத்துடன் தமிழீழத்தில் அத்திட்டம் அமுல் நடத்தப்படும் என்று கூறினார். (70)

# மின் இணைப்புக் கம்பிகள் மானிப்பாயில் பெருமளவு திருட்டு

கடந்த சில வாரங்களில் மானிப்பாய், நவாலி, சுதுமலைப்பகுதிகளில் பெறுமதி வாய்ந்த மின்சார வயர்கள் இரவு நேரம் திருடப்பட்டு வருகின்றன.

சுதுமலை கச்சியப்பா வீதி, நவாலி பிரசாத் வீதி, கொத்துக்கட்டி வீதி ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான மின் வயர்கள் கடந்தவாரங்களில் மட்டும் களவு போயுள்ளன.

மேலும் ஆனைக்கோட்டை, மானிப்பாய் பிரதேச சபை மின்மாற்றிகளிலும் டிரான்ஸ்போமர் ஒயில் திருட்டு நடைபெற்றுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

க. பொ. த (சா. த) பரீட்சை

# பெறுபேறு கிடைக்காதோர் கோட்டஅலுவலகங்களில் பெறலாம்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரண தர தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் யாழ் கல்வித்திணைக்களத்தின் மூலம் அவர்களது முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பெறுபேறுகள் இதுவரை கிடைக்காதோர் தாம் பரீட்சை எழுதிய மண்டபம் அமைந்துள்ள பகுதிக் கோட்டக்கல்வி அலுவலகங்களில், தேசிய ஆளடையாள அட்டையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தோரும் தமது பாடசாலைக் கோட்ட அலுவலகங்களில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

வார்ட்டில்...

களுடன் உடன் தொடர்ய கொண்டு அந்நோயாளியை மீண்டும்வைத்தியசாலைக்குத் தூக்கிச் செல்வதற்கு உதவினார்.

ஆனால் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி பண்டத்தரிப்பைச் சேர்ந்த தெய்வேந்திரராஜா (50) என்ற இந்நோயாளி இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (70, 74, 71)

பாதுகாப்புப்...

னும் அச்சம் காரணமாக நோயாளர்களும், ஊழியர்களும் வைத்தியசாலைக்கு வரத்தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே கிளிநொச்சி வைத்தியசாலையையும் அதனைச் சூழவுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியையும் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்த முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயவென சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்தனர். (74)

# பெண்புலி வீர மரணம்

குப்பிளான் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மீனா (கிளிநொச்சி) நேற்று வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

# கொத்தணி அதிபர்கள் கூட்டம்

இராணுவ நடவடிக்கையினால் முற்றாக இயங்க முடியாதுள்ள காங்கேசன்துறைக் கொத்தணியைச் சேர்ந்தசகல அதிபர்களுக்குமான அவசர கூட்டம் உடுவிலிலுள்ளகொத்தணியின் தற்காலிக பணிமனையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (32

காசோலைகள்...

லைகள் புதுப்பிக்கப்பட்டு யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்துள்ளன.

இக்காசோலைகளை புதுப்பிப்பதற்கென ஒப்படைத்தவர்கள் அவற்றை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

அடிப்படை..

தில் குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்கதலைமையிலானஏழு நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பொதுநிர்வாக மாகாணசபையின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், நிதியமைச்சின் செயலாளர், சுங்கப்பணிப்பாளர், நாயகம் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன விகிதாசாரக் கொள்கை பற்றிய அரசின் சுற்று நிருபத்தின்படி நியமனங்கள் பதவியுயர்வுகள் ஆகியன சிங்களவருக்கு 75%, தமிழருக்கு 12. 7%, முஸ்லிம்களுக்கு 8%, இந்தியவம்சாவழியினருக்கு 5 5% என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## காலமானார்

### பாஸ்டர் ஏ. ஜோன் அவர்களின் அடக்க ஆராதனை

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று 13-11-90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு, இலங்கை பெந்தெகொஸ்தே சபை, சுண்டுக்குளி விசுவாச வீட்டில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காகக் கொழும்பிலுள்ள எமது தலைமை ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை சபையாருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
சகோதரன் ஏ. மகேந்திரன்,
இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டுக்குளி.

11068

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 13-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது'

## உலக அரங்கில்

# ஜப்பானிய சக்கரவர்த்தியாக அக்கிஹிட்டோ முடிசூடினார்

ஜப்பானின் புதிய சக்கரவர்த்தியாக அக்கிஹிட்டோ நேற்று முடிசூட்டப்பட்டார். இவ்வைபவத்தில் 158க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். நேற்றைய முடிசூட்டு வைபவம் ஆயிரம் ஆண்டுகளாக ஜப்பானிய கலாசாரம் பேணப்பட்டு வருவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

இளவரசர் அக்கிஹிட்டோ காவி, கறுப்பு நிறத்திலான அரச பரம்பரையினருக்கான உடையுடனும், இளவரசி மிக்கோ பன்னிரண்டு அடி நீளமான கிமானா உடையுடனும் முடிசூட்டு விழாவில் காணப்பட்டனர்.

இதனிடையே முடியாட்சிக்கு எதிரான இடதுசாரி அமைப்பான சுக்காகோகா இயக்கம் பல எதிர்ப்பு ஆர்பாட்டத்தை நகரில் நடாத்தியது மூன்று ராணுவ முகாம்கள் மீது உள்ளூர் தயாரிப்பு ரொக்கட் ஏவுகணை வீசப்பட்டது. பல ரயில் நிலையங்கள் தீக்கிரையாகின எனினும் இவ்எதிர்ப்பு நடவடிக்கை சக்கரவர்த்தி அக்கிஹிட்டோவின் நகர உலாவை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. திறந்த ரோல் ரோய்ஸ் காரொன்றில் இவர் நகர்வலம் வந்த போது ஜப்பானிய மக்கள் அவரை வீழ்ந்து வணங்கியதாக தெரிவிகப்படுகிறது.

ஜப்பானில் அரச பரம்பரையினர் இறைவனின் தூதர்கள் என்ற பழமைவாத நம்பிக்கை இன்னமும் அங்கு நிலவுவதை இது நிரூபிப்பதாக இருந்தது. எனினும் தற்போது சக்கரவர்த்தி ஓர் சம்பிரதாய பதவியாகவே நவீன ஜப்பானில் கருதப்படுகிறது.

# தனது குடும்பத்தை ஏலத்தில் விற்ற இளைஞனுக்கு மரணதண்டனை

தனது தாயாரையும், மனைவியையும், மகளையும் ஏலத்தில் விற்ற இளைஞன் ஒருவனுக்கு சீனமேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இவர் தனது அயலில் உள்ள ஏனைய 18 இளம் பெண்களையும் அடிமைகளாக விற்றுள்ளார். தனது மனைவியையும் பதின்மூன்று வயது மகளையும் 392 அமெரிக்க டொலர்களுக்கும், தம்தாயாரை 254 டொலருக்கும் விற்றுள்ளார். இவர் தமது இந்த ''மனித விற்பனையை'' 1985 முதல் நடாத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற சன்டோங் மாகாணம், சூதாட்டம், போதைப்பொருள், விபசாரம் என்பனவற்றினால் சீரழிந்துள்ளதாகக்கூறப்படுகிறது.

# கொன்ரா கிளர்ச்சியாளர்- ஜனாதிபதி பேச்சுகள் முறிந்தது

நிக்கரகுவாவில் கொன்ரா கிளர்ச்சியாளர்களுக்கும் ஜனாதிபதி சேமோராவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துவிட்டன. சேமோராவின் அமைச்சரவையில் முன்னாள் சன்டினிஸ்டா அரசாங்கத்தில் பதவி வகித்த இரு அமைச்சர்களை நீக்கி விட வேண்டுமென்பதே கிளர்ச்சியாளர்களின் கோரிக்கை. ஆனால் சண்டினிஸ்டாவின் செல்வாக்கு நிக்கரகுவா ராணுவத்தில் அதிகமாக இருப்பதால் இந்த இரு அமைச்சர்களையும் விலக்க ஜனாதிபதி சேமோரா மறுத்துவிட்டார் தாம் முழுமையாக ஆயுதங்கள் ஒப்படைத்து விட்ட நிலையில் முன்னர் உறுதியளிக்கப்பட்ட எந்த உதவியும் வழங்கப்படவில்லை என இந்த அமெரிக்கசார்பு கொன்ரா கிளர்ச்சியாளர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கல்வி...

தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகளின் கடந்த கால நிகழ்வுகளை நோக்குமிடத்து, புலிகள் கல்வி சம்பந்தமாகக் கொண்டுள்ள கொள்கையை மக்கள் புரிந்து கொள்வார்கள்'' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முற்றுப்பெறாத யுத்தம் . ..
நாளை வெளிவரும்

பென்சன்...

பவர்கள், யாழ் செயலகம் பத்திரிகை வாயிலாக அறிவித்தல் கொடுக்கும்வரை தமது வவுச்சர்களை வங்கிகளில் வைப்பிலிட வேண்டாம் என ஓய்வூதியக்கிளை அறிவித்துள்ளது. (66)

## நன்றி நவிலல்

### உயர்திரு. நா. கிருஷ்ணானந்தன்

(பெர்ருளியலாளர்)

பொருளியலாளர் உயர்திரு. நா. கிருஷ்ணானந்தன் அவர்களின் 2வது ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தரமாணவ மாணவிகள் மற்றும் அன்பர்கள், நண்பர்கள் யாவரும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்காக விக்னா கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர்,
விக்னா ரியூசன் சென்ரர்,
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

11067